[1990 மார்ச் 24

மாதவரம் பால் பண்ணைக்குச் சொந்தமான காலியிடங்கள், கட்டிடங்களில் சிறு தொழில்கள்.

*2177—திரு. டி. கே. பழனிச்சாமி : லாரா

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தற்சமயம் பயனற்ற நிலையில் உள்ள மாதவரம் பால் பண்ணைக்குச் சொந்தமான காலியிடங்களிலும், கட்டிடங்களிலும் சிறு தொழில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாதவரம் பால் பண்ணையை தற்பொழுது புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு மாற்றவிருப்பதால் அங்கு சிறு தொழில் தொடங்க அனுமதிக்கவியலாது. இக்கட்டிடங்களில் தற்பொழுது பயனற்றவை என்று எதுவுமில்லை. மேலும் சிறுதொழில்கள் தொடங்கினால், கால்நடை வளர்ப்பும், சுற்றுப்புறச் சூழ்நிலையும், பால் பெருக்கமும் பாதிக்கப்படுவதுடன் மறைப்பு நிலையும் ( privacy ) பாதிக்கப்படும் என்று கருதப்படுகின்றது.

திரு. டி கே. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் அவரை நான் அழைத்துச் சென்றிருந்தேன். அங்கேயுள்ள காலி இடங்களை அவர்கள் பார்வையிட்டார்கள். பல கோடிக்கு சொந்தமான காலியிடங்கள், எதற்கும் உபயோகமில்லாமல், நல்ல கட்டிடங்களாக விளங்கி வருகிறது. அந்த இடத்தை கால் நடை பராமரிப்புத் துறை பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்குவது என்பது சரியானதா என்பதை யோசிக்க வேண்டும். ஏனென்றால் இன்றைக்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பற்று இருக்கிறார்கள். அங்கே ஒரு தொழில் நுட்பக் கல்லூரி ஏற்பாடு செய்தால் சிறப்பாக இருக்கும் என்றுதான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். இது குறித்து அமைச்சர் அவர்களுடைய பதிலை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் இருக்கின்ற 343 ஏக்கரில் 157 ஏக்கர் 92 சென்ட்டினை இன்றைக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு மாற்றம் செயயப்பட்டிருக்கிறது. மானாவாரி நிலமாக 18 ஏக்கர் 26 சென்ட்டும் சாகுபடியிலுள்ள பாசன நிலம் 9 ஏக்கரும் அதைப்போல அங்கிருக்கின்ற கட்டிடங்களும் சாலைகளும், எருக்குழிகளும் மற்ற ஏரிகள் உட்பட 165 ஏக்கர் என்றும் ஒவ்வொன்றும் ஒவ்வொருவருக்காக _ ஒதுக்கப்பட்

டிருக்கிறது. மேலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு அதிலிருந்து கிடேரி வளர்ப்புத் திட்டம் ஒன்றும், திரவ நைட்ரஜன் உற்பத்திச்சாலை ஒன்றும், உரை விந்து வங்கி ஒன்றும் இப்படி படிப்படியாக அங்கே ஏற்படுத்தப் பட்டிருப்பதால் தனியாக யாருக்கும் சிறு தொழில் நடத்துவதற்கு அனுமதிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. கே. பழனிச்சாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பால் பண்ணையைச் சேர்ந்த அதிகாரி களுடைய கவனக் குறைவின் காரணமாக காலி இடங்களில், 2, 3 இடங்களில், குடிசைகளைப் போட்டு சிலர் வசித்து வரு கிறார்கள். பலமுறை அந்த அதிகாரிகளிடத்திலே சொல்லி இருக் கிறேன். இன்னும் அந்த காலி நிலங்கள் இருக்குமேயானால் சமுதாயத்திலே இருக்கக்கூடிய சமூக விரோதிகள் நிச்சயமாக அந்த இடங்களில் குடிசை போட்டு வியாபாரம் செய்து விடு வார்கள். உடனடியாக அந்த இடத்தைப் பாதுகாத்திட தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வ தோடு எப்படியாவது அந்தக் கட்டிடங்களில் நல்ல வருமானம் வரக்கூடிய தொழில்களையாவது ஆரம்பிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்ப பட்டு குடிசைகளெல்லாம் அகற்றப்படும் என்பதைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

9–50 மணி

திரு. சோ. அழகர்சாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கேள்வி என்றாலும் முக்கிய மான விஷயமும் ஆகும். ஏனென்றால், ஏற்கெனவே பெரிய ஒரு பண்ணையை ஆரம்பிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இடம் அந்த மாதவரம் பால் பண்ணையினுடைய இடம். மகாராஷ்டிர மாநிலத்தில் பம்பாய் போன்ற இடங்களுக்குச் சென்ற நமது மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கு பார்த்திருக் கலாம். பம்பாய்க்கு வெளியே 7–8 கிலோ மீட்டர் தூரத்தில் ஆரே பால் பண்ணை என்று அமைத்து மிக நவீனமான முறை யில் பெரிய அளவில் அதை அமைத்து சிறந்த முறையில் பயன் படுத்தி வருகிறார்கள். அதே மாதிரி நமது தமிழகத்திலும் ஒரு முன் மாதிரியாக பண்ணையை ஏற்படுத்துவது மட்டுமல்ல, மிக மிக முக்கியமான, அனைவருக்கும் தேவையான, குழந்தை களுக்குத் தேவையான பாலைச் சீராக வழங்க முன்வர வேண்டும். நாம் காலையில் எழுந்து காப்பி, டீ குடிக்கும் போது பார்க்க லாம். 3 நாளைக்கு முன்னால் கறந்த பாலைத்தான் பதப்படுத்தி இங்கே கொடுக்கிறார்கள். ஆகவே அன்றாடம் பால் கிடைக்கக் கூடிய வகையில், மாடுகளை இந்த கால்நடைத் துறையே வளர்த்து பாலை எடுத்துக் கொடுக்கலாம். இவ்வளவு பெரிய கட்டிடங்கள் கட்டி வீணாகப் போகின்றன என்ற நிலையில் ......

[1990 மார்ச் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாவாகவே கேட்கலாமே. நீங்கள் மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி ; ஆகவே இன்றைக்கு முன்மாதிரியான ஒரு பால் பண்ணையாக, அதாவது பம்பாய் பால் பண்ணையைப் போல இங்கே அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆவின் நிறுவனத்திற்கு என்று தனியாக நிலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, மீதியிருக்கிற நிலம் தான் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. கடந்த காலத்தில் மாடுகளை வைத்து வளர்த்து, பால் வழங்கப்பட்டதால் அரசுக்கு மிகவும் நஷ்டம் ஏற்பட்ட காரணத்தால்தான், அந்த எண்ணம் கைவிடப்பட்டது. மேலும் முன் மாதிரியான பால் பண்ணை ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். மூன்றாவது பால் பெருக்கத் திட்டத்தின் கீழ் சோளிங்கரில் பால் பண்ணை அமைய இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வள்ளுவர் கோட்டம்.

*5596—திரு. சா. கணேசன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வள்ளுவர் கோட்டம் மேலும் பொலிவூட்டப்படுவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டத்தின் ஒரு பகுதியிலே, திருக்குறள் ஆய்வு மையம் ஒன்றை அமைத்து, திருக்குறள் பற்றி அனைத்து மொழியிலும் வந்துள்ள புத்தகங்களைச் சேகரித்து நூல் நிலையம் அமைக்கவும், குறிப்பாக தமிழறிஞர்கள் மு.வ.வின் திருக்குறள் தெளிவுரை டாக்டர் கலைஞர் அவர்களுடைய குறளோவியம் போன்ற நூற்களை அரசே அச்சிட்டு இந்த வள்ளுவர் கோட்டத்தில் மலிவு விலையில் விற்பனை செய்யவும், அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.